சட்டங்களையெல்லாம் திருத்தியமைக்க அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்து மணச் சட்டத்தைச் சீர்திருத்தவேண்டும் என்ற எண்ணத்திலேதான் 1955-ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. இதிலே மேலும் திருத்தங்கள் வேண்டுமென்றால், அவற்றை மாநில அரசு பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது. கனம் உறுப்பினரும் அவருடைய யோசனையை தெரிவிக்கலாம்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister for Law to state whether the State Government has received any proposal from the Central Government regarding the age of marriage for girls?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பத்திரிகைச் செய்தி தவிர வேறு செய்தி எங்களிடத்தில் இல்லை.

பெருந்துறைக்குக் குடிநீர்

***61. வினா.—திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், ஈரோடு தாலுகாவில் காவிரியிலிருந்து பெருந்துறைக்குக் குடித் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதை நிறைவேற்றுவதில் காலதாமத மேற்படுவதற்குக் காரணங்கள் யாவை ?

(உ) அதன் மூலம் பயன் பெறும் பஞ்சாயத்துக்கள் எவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) & (உ) கீழ்க்கண்டுள்ள பஞ்சாயத்துக்களுக்கு நீர் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு 1967, ஜனவரி மாதத்தில்தான் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்வதில் காலதாமதம் ஏதுமில்லை.—

பெருந்துறை.

கருமாண்டி சொல்லிபாளையம்.

சென்னிமலை.

சித்தோடு.

குமிழம்பரப்பு.

கங்காபுரம்.

நசியனூர்.

லாதுப்பட்டி.

ஈங்கூர்.

முகாகிப்பிடாரியூர்.

ஒற்றைப்பாறை.

அம்மாப்பாளையம்.

திரு. செ. பாலசுப்ரமணியன் : இக் குடிதண்ணீர்த் திட்டத்தைக் காங்கயத்திற்கு விஸ்தரிக்கும் நோக்கம் சர்க்காருக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

திரு. ஈ. எம். நடராசன் : கோவை மாவட்டம் அந்தியூர் நகரப் பஞ்சாயத்திற்குப் பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

DR. H. V. HANDE : What is the amount earmarked for this scheme?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The estimated cost is Rs. 42.45 lakhs installed and Rs. 1,72,000 to maintain.

திரு. என். துரைபாண்டியன் : நாங்குனேரிக் குடிதண்ணீர்த் திட்டம் இந்த ஆண்டில் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

சிதம்பரம் புதைசாக்கடைத் திட்டம்

*62. வின.—திரு. எஸ். சிவசுப்ரமணியன் : மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் பாதாள சாக்கடை நிறுவும் திட்ட வேலை தற்போது எந்த நிலைமையிலுள்ளது ?

(இ) எப்போது முடிவு பெறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) சிதம்பரம் புதைவடிகால் திட்டம் தனித்தனிக் கழிவு நீர்ப்பகுதிகளைக் கொண்ட மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு வடி நீர் இறைக்கும் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. ஒரு மண்டலத்தில் வடிகால் திட்ட வேலை ஏறத்தாழ முடிவு பெறும் நிலையிலுள்ளது. மற்ற இரு மண்டலங்களிலும் வேலை நடைபெற்று வருகிறது.

(இ) இத்திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.